# குறுந்தொகைப் பாடல்களில் பெண்மொழி

செல்வஅம்பிகை நந்தகுமரன்,

தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

selvampikai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

குறுந்தொகைப் பாடல்களில் பெண்மொழி என்னும் பொருளில் இந்த ஆய்வு அமைகின்றது. பெண்ணிய ஆய்வில் பெரிதும் பேசப்படும் விடயங்களில் ஒன்றாகப் பெண்மொழி அமைகின்றது. பெண்மொழி என்பது ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கு எதிரான குரல் என்ற கருத்தைப் பெண்ணியவாதிகள் முன்வைக்கின்றனர். இன்று கவிதை எழுதிக்கொண்டிருக்கும் பெண் கவிஞர்களுக்கு முன்னோடிகளாகச் சங்கப் பெண்பாற் புலவர்கள் விளங்குகின்றனர். எட்டுத்தொகை நூல்களில் பரவலாகக் காணப்படும் பாடல்களைப் படிப்பதன் மூலம் தமிழ்மரபில் பெண்புலவர்களின் ஆளுமையை அறிந்து கொள்ளமுடியும். எட்டுத் தொகைப்பாடல்களில், கருத்துக்கள், வெளிப்படுத்தும் முறை, மொழிப்பயன்பாடு, உத்திகள் போன்ற நிலைகளில் ஆண் - பெண் பால்நிலை வேறுபாடு காணப்படுகின்றது. பெண்பாற்புலவர்கள் தமக்கென்ற சிறப்பான மொழிக்கையாளுகை மூலம் தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வானது குறுந்தொகைப் பாடல்களை ஆய்வு மூலங்களாகக் கொண்டமைகின்றது. பெண்கள் தங்கள் உள்ளத்து உணர்வுகளைக் கூறக்கூடாது என்ற மரபையும் தாண்டி தமது உணர்வுகளை வெளியிட்டமையை அவர்களின் கவிதை மொழியின் மூலம் இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கம். சங்கப்பாடல்கள் பல்வேறு பெயர் அறியாப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. பாடல்களில் வரும் உவமையால் புலவர்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள் என. பாடற் பொருளை நுண்மையாக ஆய்வு செய்வதன் மூலம் இச்சிக்கல் தீர்வு காணப்பெறும். ஆய்விலே பகுப்பாய்வு முறை, விவரணமுறை, ஒப்பீட்டு முறை ஆகிய ஆய்வுநெறிகள் மேற்கொள்ளப்படும். அகப்பாடல்களில் இடம்பெறும் மொழிவகைப்பாடு, மாந்தர்களின் கூற்றுக்கள் வகைப்படுத்தப்பட்டு பகுத்து ஆராயப்படும். அகப்பாடல்களைத் தக்க விளக்கம் செய்யும் வகையில் விவரணமுறை அணுகப்படும். பெண்பாற் புலவர் பாடல்கள் ஆண்பாற் புலவர்களின் பாடல் மொழியோடு ஒப்பிட்டு ஆராயப்படும். இன்று பால் அடையாளத்துடன் அறியப்படும் பெண்கவிதை மொழியின் தனித்துவத்தினையும் மூலத்தினையும் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து கண்டறிய வாய்ப்புண்டு.

**திறவுச் சொற்கள் -** பெண்மொழி, பெண்பாற் புலவர்கள், குறுந்தொகை

## 1. ஆய்வு அறிமுகம்

அண்மைக்காலம் வரை பெண்ணிலை வாதம் தொடர்பான கருத்துக்கள் ஆய்வுலகில் முக்கிய இடம்பெற்றுள்ளன. பெண்ணிய ஆய்வில் அதிகம் பேசப்படும் விடயமான பெண்மொழியைப் பற்றிய ஆய்வுகளில் பலர் கவனம் செலுத்தி வருகின்றனர். மொழி என்பது கருத்துத் தொடர்புச் சாதனம். கவிஞன் சிறப்பான மொழிப் பண்புகளைத் தெரிவுசெய்து கூறவந்த கருத்தினை உணர்த்தி விடுவான். மொழியைக் கையாள்பவரின் சூழல் அனுபவம், வாழ்வியல் அனுபவம், உணர்வு, நோக்கம் என்பவற்றைப் பொறுத்து மொழியின் அமைப்பும் கருத்து நிலையும் மாறுபடும். ஒரு பொருள் பற்றியதான இருவரது வெளிப்பாடுகள் வேறானவை.

பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் பெண்பாற்புலவர்கள் தமது உணர்வுகளைப் புலப்படுத்துவதற்குத் தனித்துவமான ஒரு மொழிநிலையைக் கையாண்டுள்ளனர். இப்பாடல்கள் ஆண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்தும் வேறானவை. பெண், பெண்ணாக நின்று வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கும், ஆண், பெண்ணாக நின்று வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கும் கவிதை மொழியில் நுண்ணிய வேறுபாடுண்டு.

பெண்கள் தமது உணர்வுகளைப் புலப்படுத்துவதற்குத் தனித்துவமான மொழியினைக் கையாண்டுள்ளமை சங்க அகப்பாடல்கள் ஊடாக விளக்கப்படுகின்றது. பெண் மொழியின் பயன்பாடும் புலமைச்சிறப்பும் பெண்பாற் புலவர்களின் கவிதை மொழியின் மூலம் இனங்காணப் படும்.

## 2. குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகக் குறுந்தொகை அமைகின்றது. நானூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ள அகப்பாடல்களிலே மிகச் சிறிய பாடல்களைக் கொண்ட தொகுப்பாகும். 4 - 8 அடிகளை வரையறையாகக் கொண்டது. குறுந்தொகைப் பாடல்கள் அகவற்பாக்களாலானவை. குறுகிய அடிகளால் ஆக்கப்பட்டதனால் வரலாற்றுக் குறிப்புக்களுக்கும் நீண்ட வருணனைகளுக்கும் இடமில்லை. சங்கப் புலவர்களின் ஆளுமைக்கு குறுந்தொகைப் பாடல்கள் சான்றாகின்றன.

## 3. பெண்மொழி பற்றிய விளக்கம்

மொழி என்பது கருத்து வெளிப்பாட்டுச் சாதனம். அதில் ஆண், பெண் என்ற பால்பாகுபாட்டிற்கு இடமில்லை. எனினும் மொழியைக் கையாளும் அதிகாரம் யாரிடம் உள்ளதோ அவரது சிந்தனையை ஒட்டியே மொழியும் வடிவமைக்கப்படுகின்றது. தாய் வழிச்சமுதாய அமைப்பிலிருந்து தந்தை வழிச் சமுதாய அமைப்பாக மாறிய பிறகு பலதுறைகளிலும் ஆண்களுக்குச் சார்பாக மொழி அமைந்தது. இத்தகைய நிலைப்பாட்டிலிருந்து மாற்றம் காணும் முயற்சியாக பெண்மொழி குறித்த சிந்தனைகள் திறனாய்வுகள் வலுப்பெற்று வருகின்றன. பெண்மொழி என்பது ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கு எதிரான ஒரு மாற்றுக் கலகக்குரலாகப் பெண்ணியவாதிகளால் முன்வைக்கப் படுகின்றது.

உலக அளவில் பெண்மொழி இருந்தமைக்கான எடுத்துக்காட்டு உள்ளது. சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் 'ஜியாங்காங்' என்ற விவசாய நிலப் பிரதேசத்தில் பெண்கள் மட்டும் பேசும்மொழி நிலவியது. இதற்குப் பெயர் 'நுஷீ' (Nushu). பெண்மொழி அல்லது பெண் பிரதி என்பது பொருள். இது பெண்கள் தமக்குள் இரகசியமாகப் பேசும் மொழி. ஆண்களால் இதனை அறியவோ கற்கவோ பேசவோ முடியாது. தலைமுறை தலைமுறையாகப் பரவி வந்துள்ளது. சீனமொழியோடு தொடர்புபட்டிருந்தாலும் அதிலிருந்தும் மாறுபட்ட மொழி. கோங்ஜிமிங் என்ற சீன ஆசிரியரால் (1982) உலகுக்கு இம்மொழி பற்றித் தெரிய வந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் கல்விப் பரவல் இந்த ரகசிய மொழியைத் தடைசெய்ய பொதுமொழி நோக்கிச் செல்லும் நிலை உருவாகியுள்ளது.

தமிழ்மொழியைப் பொறுத்தவரை சங்கப் பெண்பாற் புலவர்கள் சிறப்பான அழகியல் கூறுகளும் வாழ்வியல் உணர்வுகளும் கொண்ட கவிதைகளை உருவாக்கியுள்ளனர். வாழ்வியல் குறித்தும் கலை வெளிப்பாடுகள் குறித்தும் பெண் கவிதை மொழி குறித்தும் நிலவிய செறிவான பல மதிப்பீடுகளை சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. பெண்மொழி என்பது பெண் தன்னுடைய காதல் உணர்வுகளை ஆணிடம் எடுத்துரைக்கும் மொழி என்று குறுகிய நோக்கில் கூறுவது தவறாகும். இத்தகைய சூழலில் கவிதைகளின்வழி வெளிப்படும் சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிப் பயன்பாட்டையும் புலமைச் சிறப்பையும் வாழ்வியல் உணர்வுகளை வெளிப் படுத்தும் தன்மைகளையும் ஆழ்ந்து பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது. சங்கப் பாடல்களை நுணுக்கமாக ஆராயும்போதே பெண்மொழி குறித்த சிந்தனைகளை வெளிக்கொணர முடியும்.

## 4. அகப்பாடலில் பெண்கள் பேசிய சிறப்பான மொழிகள்

அகப்பாடலில் பெண்கள் பேசிய மொழி சிறப்பான பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கப் புலவர்கள் பெண்கள் பேசியமொழியை இனங்காட்ட முயன்றுள்ளனர். மொழிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அடைச்சொல் பெண்களின் பண்புகளைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. சிலமொழிகளைப் பேசும்பண்பு பெண்களிடம் இருந்துள்ளதை அகப்பாடல்கள் சான்று காட்டுகின்றன. பெண்கள் பேசிய மொழிகள் பின்வருமாறு பதிவு செய்யப் பட்டுள்ளன.

1. அருண்மொழி - அகம்.311
2. ஆறல்லமொழி - கலி.147
3. இன்மொழி - அகம்.193, 361
4. ஒன்றுமொழி - அகம்.196
5. குறுமொழி - நற்.310
6. சின்மொழி - குறுந்.14, நற்.190, அகம்.75, கலி.29, 57, 125, 132
7. செதுமொழி - கலி.68
8. செம்மொழி - அகம்.349
9. தன்மொழி - நற்.293
10. தீமொழி - நற்.56, கலி.144
11. தேமொழி - குறுந்.72, நற்.220, 250, 262, 374, ஐங்.378, 468, கலி.29, 55, 80, 125
12. தேற்றிய மொழி - ஐங்.56

13. நகைமொழி - கலி.40

14. நன்மொழி குறுந்.15, நற்.10, 204, 254, அகம்.126, 198, 353, கலி.21

15. நன்னர்மொழி - கலி.21

16. பணிமொழி - குறுந்.176, நற்.167, 378, அகம்.220, 310

17. புதுமொழி - கல்.2

18. பொதுமொழி - கலி.68

19. மடமொழி - நற்.207, அகம்.324, கலி.102

20. மதிமொழி - கலி.68

21. முதுமொழி - கலி.68

22. மென்மொழி - நற்.146, 148, ஐங்.419

தலைவனிடம் தலைவி பேச முற்படும்போது மிகக் குறைந்தளவு சொற்களையே பயன்படுத்தியுள்ளாள்.

''அமிழ்ந்து பொதி செந்நா அஞ்ச வந்த

வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி அரிவை''

(குறுந்.14)

இப்பாடலில் வரும் 'சின்மொழி அரிவை' என்ற தொடர் பெண்ணின் மொழியின் தன்மையையும் அவளது பருவத் தையும் விளக்கி நிற்கின்றது. பெண்ணின் மொழியின் இனிமையான பண்பு பல பாடல்களில் 'தேமொழி' எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

''தேமொழித் திரண்ட மென்தோள் மாலைப்

பரீஇய வித்தி ஏனல்

குரீஇ ஓப்புவாள் பெருமழைக்கண்ணே''

(குறுந்.72)

பெண்ணின் குரல் இனிமையானதையும் குருவி யோப்புவதால் அக்குரல் இனிமை பெற்றதையும் குறுந் தொகைப் பாடல் குறிப்பிட்டுள்ளது.

தலைவன் பேசுகின்ற பொய்யான மொழியினைக் குறிப்பதற்குப் பணிமொழி என்ற சொல்லைச் சுட்டியுள்ளனர்.

''ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்

பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்

நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை''

(குறுந். 176)

தலைவன் தலைவியின் நெஞ்சை நெகிழ்த்தும்படி அன்புடையவன் போல நயமாகப் பேசுகின்ற பொய்மொழி யினைக் குறிப்பதற்கு பணிமொழி என்பதைப் பயன் படுத்தியுள்ளமை தெளிவாகின்றது.

**5. குறுந்தொகைப் பாடல்களின் பகுப்பு நிலை**

குறுந்தொகையில் பெண்பாற் புலவர்களின் பாடல் களும் அமைந்துள்ளன. அவற்றைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| தொ. எண் | புலவர் பெயர் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அள்ளூர் நன்முல்லையார் | 32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237 |
| 2 | ஆதி மந்தியார் | 31 |
| 3 | ஒக்கூர் மாசாத்தியார் | 126, 139, 186, 220, 275 |
| 4 | ஔவையார் | 15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102. 158, 183, 200, 364, 388 |
| 5 | ஊண்பித்தை | 232 |
| 6 | கச்சிப்பேட்டு நன்னாகையார் | 30, 172, 180, 192, 197, 287 |
| 7 | காக்கை பாடினியார் நச்செள்ளையார் | 210 |
| 8 | நன்னாகையார் | 118, 235 |
| 9 | பூங்கணுத்திரையார் | 48, 171 |
| 10 | வருமுலையாரித்தி | 176 |
| 11 | வெள்ளி வீதியார் | 26, 44, 58, 130, 146, 149, 169, 386 |

பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் முப்பதிற்கு மேற்பட்ட புல வர்கள் தனித்துவம் மிக்க பெண்மொழியில் கவிதைகள் படைத்துள்ளனர்.

### பெண்பாற் புலவர்களின் கூற்றுநிலை விளக்கம்

| தொ. எண் | கூற்று | பாடல் எண் |
|---|---|---|
| 1 | தலைவி | 67, 68, 93, 140, 157, 202, 126, 186, 220, 28, 39, 43, 49, 91, 102, 158, 183, 200, 171, 169, 30, 172, 192, 197, 31, 118, 325 |
| 2 | தோழி | 139, 275, 23, 388, 210, 48, 26, 130, 146, 180, 287, 232, 176 |
| 3 | தலைவன் | 32, 237, 29, 99, 58 |
| 4 | செவிலி | 15, 44 |
| 5 | பரத்தை | 80 |
| 6 | இற்பரத்தை | 364 |

குறுந்தொகைப் பாடல்களில் பின்வருவோர் கூற்று நிலை அமைந்துள்ளது.

| | |
|---|---|
| 1. தலைவன் | 6. பரத்தை |
| 2. தலைவி | 7. இற்பரத்தை |
| 3. தோழி | 8. காதற்பரத்தை |
| 4. செவிலித்தாய் | 9. பாங்கன் |
| 5. நற்றாய் | 10. கண்டோர் |

இப்பத்து வகையான கூற்றுக்களில் ஏழு வகையான கூற்று பெண்கூற்றாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மையாக அகப்பாடல்களில் பெண்களின் கூற்றுக்களே அதிகமாக உள்ளன. பெண்களின் மனநிலையும் உணர்வு நிலையும் பெரிதும் பேசப்பட்டிருப்பதைக் இக்கூற்று நிலைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. எனவே அதற்கான பெண்மொழி ஒன்றும் பாடல்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதை உணர முடிகின்றது.

### பெயரறியாப் புலவர்கள்

குறுந்தொகைப் பாடலில் பெயர் அறிய முடியாத புலவர்களுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அச்சிறப்புப் பெயர்கள் புலவர் பாடிய செய்யுட்களின் தொடர்களாகக் காணப்படுகின்றன. அதனைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

| தொடர் எண் | பாடல் எண் | கூற்று | வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் | நிலம் | ஒழுக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 9, 356, 378, 396 | தோழி, செவிலி, செ, செ | கயமனார் | பாலை | பிரிதல் |
| 2 | 40 | தலைவன் | செம்புலப் பெயல் நீரார் | குறிஞ்சி | புணர்தல் |
| 3 | 41 | தலைவி | அணிலாடு முன்றிலார் | பாலை | பிரிதல் |
| 4 | 47 | தோழி | நெடு வெண் நிலவினார் | குறிஞ்சி | புணர்தல் |
| 5 | 54 | தலைவி | மீனெறி தூண்டிலார் | குறிஞ்சி | புணர்தல் |
| 6 | 74 | தோழி | விட்ட குதிரையார் | குறிஞ்சி | புணர்தல் |
| 7 | 131 | தலைவன் | ஒரே ருழவனார் | பாலை | பிரிதல் |
| 8 | 224 | தலைவி | கூவன் மைந்தன் | பாலை | பிரிதல் |
| 9 | 267 | தலைவன் | காலெறி கடிகையார் | பாலை | பிரிதல் |
| 10 | 277 | தோழி | ஓரிற்பிச்சையார் | பாலை | பிரிதல் |
| 11 | 290 | தலைவி | கல் பொரு சிறுநுரை யார் | பாலை | பிரிதல் |
| 12 | 293 | தலைவி | கள்ளிலாத் திரையனார் | மருதம் | ஊடல் |
| 13 | 305 | தலைவி | குப்பைக் கோழியார் | குறிஞ்சி | புணர்தல் |
| 14 | 323 | தலைவன் | பதடிவைகலார் | முல்லை | இருத்தல் |
| 15 | 324 | தோழி | கவைமகன் | குறிஞ்சி | புணர்தல் |
| 16 | 370 | பரத்தை | வில்லக விரலினார் | மருதம் | ஊடல் |
| 17 | 387 | தலைவி | கங்குல் வெள்ளத்தார் | முல்லை | இருத்தல் |
| 18 | | தோழி | குறியிறையார் | குறிஞ்சி | புணர்தல் |

சங்கப்பாடல்களில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் தொகையில் குறைவாகவே உள்ளன. தொகுப்பு நிலையில் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் வகை மாதிரிக்காகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். வாய்மொழி நிலையிலிருந்த பெண்பாற் புலவர்களின் பாடல்கள் பேணப்படாமல் போயிருக்கலாம். பெயரறியாத பாடல்களில் பல பெண்பாற் புலவர்களின் பாடல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

மேற்குறித்த அட்டவணையில் காட்டப்பட்ட புலவர் பாடல்களில் நான்கு பாடல்கள் மட்டுமே தலைவன் கூற்றாக வருகின்றன. ஏனைய பாடல்கள் பெண்களின் கூற்றுக்களாகவே அமைந்துள்ளன. இத்தகைய கூற்று நிலையை நோக்கும் போது இப் புலவர்களும் பெண்பாற் புலவர்களாக இருக்கக்கூடும் என்ற கருத்துப் புலப்படுகின்றது. எடுத்துக்காட்டாகக் கயமனார் எனச் சிறப்புப் பெயர் வழங்கப்பட்ட புலவர் பாடிய பாடல்கள் மூன்று

செவிலித்தாயின் உணர்வு நிலையைத் தெளிவாகக் காட்டு கின்றன.

“ஞாயிலு காயாது மர நிழற்பட்டு
மலைமுதற் சிறுநெறி மணன் மிகத்தா அய்த்
தண்மழை தலையின் றாக நந்தீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா வரிவை போகிய சுரனே”

(குறுந்.378)

இப்பாடலில் பெண்ணின் வளர்ப்பு நிலை, போகும் வழி துன்பமற்றிருக்கத் தெய்வத்தை வேண்டுதல், பெண்ணின் இளவயது நிலை என்பன பற்றிக் குறிப்பிடுமிடத்துப் பெண் மொழியே பயன்படுத்தப்பட்டுள்ளது. தாயின் உணர்வு நிலை சொற்கள், தொடர்கள் மூலமாகச் சிறப்பாக வெளிப் பட்டுள்ளன.

**பெண் மொழிப் பயன்பாடும் புலமைச் சிறப்பும்**

அகப்பாடல்கள் கூற்றுநிலைப் பாடல்களாகவே அமைந்துள்ளன. குறுந்தொகைப் பாடல்களில் பெண்பாற் புலவர்கள் பாடிய 51பாடல்கள் உள்ளன. தலைவி, தலை வன், தோழி, செவிலி, பரத்தை, இற் பரத்தை என்போருடைய கூற்றுக்களாக அமைந்துள்ளன. தலைவி கூற்றாக 29 பாடல்கள் உள்ளன. தலைவி கூற்றுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதை உணர முடிகின்றது. தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம் கூறுவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைத் தரலாம்.

‘‘பூழ்க்காலன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழையினங் கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கும்
மருந்து பிறிதில்லை அவர் மணந்த மார்பே’’

(குறுந்.68)

குறும்பூழ்ப் பறவையின் காலைப் போன்று செவ்விய காலையுடைய உழுந்தினது மிக முதிர்ந்த காய்களை மான் கூட்டம் தின்னுகின்ற பொறுத்தற்கரிய முன்பனிக் காலம் வந்து விட்டது. ஆனால் அவளைப் பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. தன்னுடைய பிரிவுத் துன்பத்தைத் தீர்க்கும் மருந்து என்னை மணந்த அவரு டைய மார்புதான் எனப் பெண் தனது தோழியிடம் கூறுகி ன்றாள். தனது பிரிவுத் துன்பத்தை தீர்க்கும் தலைவனின் மார்பைப் பற்றிப் பேசுகின்றாள். முன்பும் துன்பம் தீர்ந்த அநுபவத்தைக் கூற்று நிலையில் எடுத்துக் கூறுகின்றாள்.

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பாடற் பொருள் பெண்ணின் வாழ்வியல் பற்றியதாக உள்ளது. தலைவியின் வாழ்க்கையில் தோழி, செவிலி, நற்றாய் என மூன்று பெண்கள் அக்கறை உடையவராக இருந்தனர். ஒரு பெண் தன்னுடைய விருப்பத்திற்குரிய ஆணுடன் தமரைப் பிரிந்து சென்று விட்டாள். அதைப் பெண்மொழியில் ஔவையார் பதிவு செய்துள்ளார்.

“பறைபடப் பணில மார்ப்ப விறை கொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயாகின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே”

(குறுந்.15)

தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்று விட்டாள் என்ற செய்தியைத் தோழி மூலம் செவிலி அறிகின்றாள். அச்செய்தியை நற்றாயிடம் சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. கோசருடைய நன்மொழி யைப் போல தலைவியின் நட்பும் உண்மையானது என்று எடுத்துக் கூறப்படுகின்றது. ஆணும் பெண்ணும் தம் நட்பு நிலையை உலகறியச் செய்துவிட்டனர். அன்பு வாழ்வியலைப் பெண் பேணிச் சென்றதைச் செவிலி நற்றாயிடம் எடுத்துரைக்கின்றாள். உடன் போக்கினைப் பெண்கள் சமூகம் எவ்வாறு ஏற்றுக்கொண்டது என்ற பக்கு வத்தினை ஔவையார் சிறப்பான பெண் மொழியிலே பதிவு செய்துள்ளார்.

பெண் என்றால் குறிப்பாக காமம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தக் கூடாது என்ற கருத்துநிலை பொதுவாக நிலவியது. ஆனாலும் ஔவையார், ஆதிமந்தியார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தலைவி காமம் சொல்பவளாகக் காணப்படுகின்றாள். ஔவையார் தலைவியின் விருப்பத்தை மிகவும் பலமாக வெளிப்படுத் துகின்றார்.

“முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்
ஓரேன்யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்
அலமலரல் அசைவளி அலைப்ப
என்உயவு நோய்அறியாது துஞ்சும் ஊர்க்கே”

(குறுந்.28)

காற்றானது எனது காதல் நோயின் கொடுமையை அறிந்து கொள்ளாமல் அலைக்கழிக்கின்றது. அதனை

அறியாமல் ஊரும் உறங்குகிறது. எனது நிலையை ஊரவர்க்கு அறிவிக்க மூட்டுவேனோ தாக்குவேனோ கூவு வேனோ எனத் தன் ஆர்வம் மேலிடக் கூறுகின்றாள். சமூகக் கட்டுப் பாட்டுக்குள் இருக்கும் நிலையில் நான் என்ன செய்ய எனத் தனது ஆசையினைத் தலைவி வெளிப்படுத்துகின்றாள். பெண்ணிடம் இயல்பாக இருக்கும் காமத்தினை வெளிப்படுத்துவதற்கு உணர்வுக்கு நெருக்க மான ஒரு மொழி இங்கே கையாளப்பட்டுள்ளது.

தலைவியின் துயரத்தை வெளிப்படுத்துவதிலும் பெண் பாற்புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர். இவர்கள் சமூகமரபில் நின்று தமது துயர் பற்றிப் பேசுவ துடன் தமது வாழ்வில் காணும் இயல்பான உவமையை யும் கையாளுகின்றனர். வெள்ளி வீதியார் தனது அழகு தலைவனுக்கும் உதவாது தனக்கும் உதவாது போதலைப் பின்வரும் உவமை மூலம் வெளிப்படுத்துகின்றார்.

''கன்றும் உண்ணாது கலத்தினும்படாது
நல்லான் தீம்பால் நிலத்துக்காங்கு
எனக்கு ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குலென் மாமைக் கவினே
(குறுந்.27)

பசுவின் பால் கன்றும் உண்ணாது கலத்திலும் படாமல் நிலத்தில் வீழ்கின்றது என இயல்பான உவமையிற் கூறுவதைக் காணமுடிகின்றது. முல்லை நிலத்தில் இயல்பாகக் காணுகின்ற வாழ்க்கைச் செய்தி பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சங்க அகப்பாடல்களில், பின்புல வருணனை, அறிவுறு த்துதல், உள்ளுறை, இறைச்சி, குறியீடு ஆகிய பல்வேறு உத்திகளில் இயற்கை கையாளப்படுகின்றது. ஒக்கூர் மாசாத்தியார், கார்பருவத்தில் தலைவன் வராமையால் ஏற்படும் துன்பத்தினை முல்லை நிலக்காட்சியின் மூலம் பதிவு செய்துள்ளார்.

''பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்த்த குறைத்தலைப் பரவை
அருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டு சூழ் மாலையும் வாரார்
கண்டிசின் தோழி பொருட்பிரிந் தோரே''
(குறுந்.220)

என்ற பாடலில் முல்லை நிலத்தில் மலரும் முல்லைப் பூ, அதன் நிறம், அது மலரும் நேரம், அதன் மணம் என்ற வருணனைகள் முல்லைநிலத் தலைவனையும் அவ னின் பிரிவுத் துன்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றன.

### ஆண்பாற் புலவர்கள் : பெண் கூற்று

அகப்பாடல்களில் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஆண் - பெண்பாற் புலவர்களிடையே உணர்வுத் தளத்தில் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. வெள்ளி வீதியார் தலைவியாக நின்று பாடிய ஒரு பாடலையும் பாலை பாடிய பெருங்கடுங்கோ தலைவி பற்றிப் பாடிய ஒரு பாடலையும் இங்கு நோக்க முடியும்.

''அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்கு மணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீய்ந்துக் கா அங்குத்
தாங்கு மளவைத் தாங்கி
காம நெரிதரக் கைந் நில் லாதே''
(குறுந்.149 வெள்ளி வீதியார்)

இப்பாடல் நாணத்தை விடமுடியாமல் காமத்தையும் வெளிப்படுத்த இயலாமல் தவிக்கும் தலைவியின் நிலை யைச் சொல்வதாக அமைகின்றது. நாணம் நம்மை விட்டுப் பிரியாமல் பலகாலம் வருத்துகிறது. கரும்பு உயர்ந்து நிற்கும் சிறு கரையில் அருவிப் புனல் விரைந்து பாய்வதால் அக்கரை தான் அழிவது போல காமம் மிகுந்து தாக்கு வதால் நாணம் என்னிடம் இல்லாமல் அழிந்துவிடும் என்ற தலைவி தன்னுடைய கையறுநிலையைத் தோழிக்கு விளக்குகின்றாள்.

''ஓர் ஊர் வாழினும் சேரிவாரார்
சேரி வரினும் ஆரமுயங்கார்
ஏதிலாளர் சுடலை போலக்
காணக்கழிப மன்னே — நாண் அட்டு
நல்லறிவு இழந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்று சேண்படவே''
(குறுந்.231 பாடலை பாடிய பெருங்கடுங்கோ)

இரண்டு பாடலும் தலைவியின் காமத்தைப் பற்றிப் பேசுகின்றன. எனினும் தலைவியின் தாங்க முடியாத காமத்தை வெள்ளி வீதியார் அருவிப் புனல் பாய்வதால் அழியும் மணற்கரைக்கு உவமிக்கின்றார். பாலை பாடிய பெருங்கடுங்கோ நாண் அட்டு நல்லறிவிழந்த காமம் என்கிறார். காமம் தன்னை விட்டுச் செல்ல

வேண்டும் என்பதற்கு வில்லுமிழ் கணை உவமை யாகின்றது. வெள்ளி வீதியார் இயற்கை யில் நாளாந்தம் காணுகின்ற காட்சி ஒன்றின் மூலம் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார். ஆனால் பெருங்கடுங்கோ கையாளுங்கின்ற உவமை வில்லுமிழ் கணை போர் சார்ந்த அனுபவத்துடன் சொல்லக்கூடியதாகும்.

ஆண்பாற் புலவர்களின் பாடல்களை எடுத்துநோக்கும் போது பெண்ணின் உணர்வுகளைக் கூறுதல் என்பதை விடப் பெரிதும் உலகியல் வாழ்க்கையில் பேணப்பட வேண்டிய அறங்களே பேசப்படுகின்றன.

**6. தொகுப்புரை**

அகவுணர்வுகளைச் சொல்லுகின்ற முறையில் ஆண்பாற் புலவர்களுக்கும் பெண்பாற் புலவர்களுக்கும் இடையில் வேறுபாடு காணப்படுகின்றது. பெண்பாற் புலவர்களின் பாடல்களில் விதியை மீறிப் பெண்கள் காமம் பற்றிப் பேசுதல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்களின் சமூக நிலை, அனுபவங்கள் பாடல்களில் உவமை யாகவும் செய்தியாகவும் கூறப்பட்டுள்ளன.

ஆண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண்களின் உணர்வுகள் இயல்பாகப் படைக்கப்படவில்லை. பெண்கள் பற்றிய சமூக நிலையையும் வாழ்வியல் அறங்களையும் தமது அனுபவங்களையும் அப்பாடல்களினூடாகச் சொல் லியுள்ளனர். பெண்பாற் புலவர்களிடம் காணப்பட்ட தனித்துவமான மொழிப் பயன்பாடும் புலமைச் சிறப்பும் குறுந்தொகைப் பாடல்களினூடாகத் தெளிவாகக் காண முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


[1] "அகநானூறு", மர்ரே அண்டு கம்பனி, சென்னை 1958

[2] அம்மன்கிளி முருகதாஸ், "சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்" , குமரன் புத்தக நிலையம், கொழும்பு. 2006

[3] அருள்,வி.,"சங்க இலக்கியம்: எடுத்துரைப்பியலும் உணர்வுக் கட்டமைப்பும்" குறிஞ்சி, கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத்துறை வெளியீடு2007

[4] ''ஐங்குறுநூறு," சதாசிவ ஐயர் பதிப்பு, ஆரிய திராவிட பாஷா பிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்.1943

[5] ''கலித்தொகை", பொ.வே.சோமசுந்தரனார் விளக்க வுரை, கழக வெளியீடு.1975

[6] ''குறுந்தொகை", ராஜம்பதிப்பு, மர்ரே அண்டு கம்பனி, சென்னை.1957

[7] நற்றிணை, பின்னத்தூர் ஆ, நாராயணசாமி உரை விளக்கமும், பொ.வே.சோமசுந்தரனார் எழு திய இலக்கணக் குறிப்பும் ஆய்வுரையும், கழக வெளி யீடு, சென்னை. 1957

[8] மனோன்மணி சண்முகதாஸ், "செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண்மொழி", சர்வதேச எழுத்தா ளர் மாநாடு சிறப்புமலர், சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், இலங்கை.2011

[9] முருகேச பாண்டியன், சங்கப் பெண் கவிஞர் களின் கவிதைகள் மூலமும் உரையும், மருதா வெளி யீடு, சென்னை. 2005

[10] வெளிரங்கராஜன், "சங்ககாலப் பெண் கவிஞர் களின் அழகியல் நிலைகள்", வார்த்தை, இணைய இதழ் வெளியீடு.2009

[11] ஜெயா,வ. "சங்கப்பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்", உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், முதற் பதிப்பு, சென்னை.2009